பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

விலை ரூபா 6=00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 18 வெள்ளிக்கிழமை (01-03-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 96

# இராணுவ அம்புலன்ஸில் நேற்றிரவு குண்டு வெடிப்பு!

## கொழும்பில் பதற்றம்

கொழும்பு, மார்ச் 1

கொழும்பு கொம்பனித் தெருவில் நேற்றிரவு 8,50 மணியளவில் இராணுவ அம்புலன்ஸில் குண்டு ஒன்று வெடித்தது.

கொம்பனித்தெரு — யூனியன் பிளேஸ் சந்தியில் இடம் பெற்ற இக்குண்டு வெடிப்பில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை.

குண்டு வெடிப்பில் காயமடைந்தோர் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலும் இராணுவ ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்பு எவ்வாறு நிகழ்ந்தது? உயிரிழந்தோர், காயமுற்றோர் எண்ணிக்கை எவ்வளவு? — என்பன பற்றிய விவரம் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. (உ)

## அனுராதபுரம் நகர சபையில் கைகலப்பு

கொழும்பு, மார்ச் 1

அனுராதபுரம் நகரசபையில் நேற்று முன் தினம் பிற்பகல் நடந்த கைகலப்பில் சபைத்தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், பிறிதொரு உறுப்பினர் ஆகியோர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-3-6)

## தப்பி ஓடிய 19 பேருக்கும் 1 வருட சிறை

சென்னை, மார்ச் 1

வேலூரில் உள்ள பிக்குமாலில் விசேட தடுப்பு முகாமில் இருந்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் 14 திகதிகளில் தப்பிச் சென்ற 43 பேரில் மீண்டும் கைது செய்யப்பட்ட 19 விடுதலைப் புலிச்சந்தேகநபர்களுக்கு நீதிவான் ஆர் சம்பத் ஒருவருடகால கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

கைதிகள் தப்பிச் செல்வதற்கு உதவி புரிந்தார்கள் எனக் கூறி சங்கர் என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியை நோக்கி ஷெல்

கரணவாய், மார்ச் 1

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றுக் காலையும், நேற்று முன்தினம் இரவும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு ஏவப்பட்ட ஷெல்கள் தொண்டமானாறு சந்நிதிப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

நேற்றுக் காலை ஏவப்பட்ட ஷெல்கள் வல்வெட்டித்துறை, ரேவடி, கொத்தியால் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (இ-80-173)

## ஹெலியிலிருந்த 2 படையினர் புலிகள் பிடியில்?

கொழும்பு, மார்ச். 1

அண்மையில் பருத்தித்துறையில் கற்கோவளம் பகுதியில் கடலில்வீழ்ந்த ஹெலிக்கொப்டரில் இருந்த படையினரில் 2 அதிகாரிகள் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனராம்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் நாய்களின் உதவியுடன் சோதனை

### கொழும்பில் புதிய ஏற்பாடு

கொழும்பு, மார்ச் 1

கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன. விசேட பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று நேற்று முதல் நடைமுறைக்கு வருவதாக கொழும்புப் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் டி. எம். டி. பி. திஸநாயக்கா தெரிவித்தார்.

சோதனை நிலையங்களில் ஆள்களையும், வாகனங்களையும் சோதனை இடும்போது, பொலிஸ் நாய்களின் உதவியும் பெற்றுக் கொள்ளப்படும்.

குறிப்பாக களனிப்பாலம், வெள்ளவத்தைப் பாலம், கிரிலப்பனைப்பாலம் ஆகியவற்றுக்கு அருகே சந்தேகத்துக்கு இடமான வாகனங்களை பரிசோதிப்பதற்கு மோப்பம் பிடிக்கும் இந்த பொலிஸ் நாய்கள் பயன்படுத்தப்படஉள்ளன. (இ-7)

### இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம்:

## மாகாண சபைக் கூட்டத்திலிருந்து ஐ. தே. க. உறுப்பினர் வெளிநடப்பு

கொழும்பு, மார்ச் 1

அரசாங்கம் முன்வைத்துள்ள இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்று —

தென் மாகாண சபையில் ஆளுங்கட்சியினரால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை ஆட்சேபித்து —

எதிர்க்கட்சி (ஐ. தே. க.) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

தென் மாகாண சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவ்வேளை அமைச்சர் ஒருவர், அரசின் தீர்வு யோசனையை விரைவில் நிறைவேற்றி நடைமுறைப் படுத்த வேண்டும் என்று மத்திய அரசைக் கோரும் பிரேரணை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருநெல்வேலியில் சிப்பாய் ஒருவர் பலி!

### புலிகள் தாக்குதல்

சாவகச்சேரி, மார்ச். 1

திருநெல்வேலிக்கு அருகே விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள வலிகாமத்தில் உள்ள திருநெல்வேலி — கொக்குவில் வீதியில் வைத்து நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் ரி 56-2 ரகத் துப்பாக்கி — 1, ரி56 ரக ரவைக்கூடுகள் — 3, நடுத்தர ரவைகள் — 112, கைக்குண்டு ஆகியவற்றை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தீர்வுத் திட்டத்தை ஆட்சேபித்து 30 பௌத்த அமைப்புகள் கொழும்பில் மாநாடு

மணிலா, மார்ச் 1

அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 5ஆம் திகதி 30பௌத்த அமைப்புக்கள் கூட்டம் நடத்துகின்றன.

கொழும்பு, பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தின் நோக்கம் குறித்து நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மூத்த பௌத்த பிக்குவான மாதுலுவாவே சோபித்த தேரர் விளக்கினார்.

தமிழருக்கு அதிகாரங்களை வழங்கும் அரசின் செயல் நியாயமற்றது என்று அவர் கூறினார்.

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சட்ட ஆவணம் எதிர்வரும் 7ஆம் திகதி தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட இருப்பது தெரிந்ததே. (இ-6-7)

## கோண்டாவிலிலும் மோதல்

சாவகச்சேரி, மார்ச். 1

நேற்று முன்தினம் காலை 9.48 மணிக்கு கோண்டாவில் சந்தியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம் பெற்றது.

இதில் லெப்டினன்ட் கோதை அல்லது உமேஷ் (கணேஷ் சுதா — அளவெட்டி), வீரவேங்கை பைந்தமிழ் (சிங்கராசா அருட்சினி — வவுனியா) ஆகியோர் வீரச்சாவடைந்தனர். (இ-3)

## இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் பிரதேச செயலகங்கள் இயங்க மாட்டா

### உ. அ. அதிபர் அலுவலகங்களே இயக்கும்

சாவகச்சேரி, மார்ச். 1

யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பிரதேச செயலகங்கள் இயங்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தற்போதைய பிரதேசசெயலகங்கள் இனி உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களாகவே இயங்கும்.

மேற்கண்ட தகவலை யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மாநாட்டில் நிர்வாக முறை பற்றிய கருத்துக்கள் பரிமாறப்பட்ட போது மேற்கண்ட முடிவும் எடுக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் நேற்று திரும்பியிருந்தார்.

இந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட மற்றும் முடிவுகள் வருமாறு:-

★ கடந்த காலத்தில் அரச அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சகல அதிகாரங்களும் மீள நடைமுறைப் படுத்தப்படும்.

★ பிரதேச செயலகங்களின் கட்டுப்பாடு, நிதிவிடயங்கள் யாவும் மீண்டும் அரச அதிப

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பிரதேச செயலக கணக்காளர் இடமாற்றம்

சாவகச்சேரி, மார்ச் 1

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் செயலகத்துக்கு மாற்றப்படுவதையடுத்து — இடம் பெயர்ந்துள்ள பிர

(4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை சங்கம் மூலம் 2 வித்துடல்கள் ஒப்படைப்பு

சாவகச்சேரி, மார்ச் 1

வலிகாமத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையில் நடந்த மோதல் சம்பவம் ஒன்றில் வீரமரணமடைந்த இரு போராளிகளின் வித்துடல்கள் விடுதலைப் புலிகளிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டன.

காங்கேசன்துறையில் படையினரால் ஒப்படைக்கப்பட்ட வித்துடல்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளினால் 'ஹபரண' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டிருந்தன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

*விற்பனைக்கு*

புதிய ஜெனரேற்றர் 1½KV விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: மங்களபதி வைத்தியசாலை, நுணாவில், கல்வயல் வீதி, (சண்முகானந்தா வித்தியாசாலைக்கு அருகில்) கல்வயல், சாவகச்சேரி. (40951)

*ஜெனரேட்டர் விற்பனை*

யன்மார் (Yanmar Diesel) 2000W. (240V), றொபின் (Robin) 28 00W. (240V). ஹொண்டா (Honda) 1500W. (110-220V), பற்றறி 200A.M. (Lucas 12V). தொடர்பு கொள்ளும் முகவரி; செ. மகேஸ்வரன், சரசாலை வடக்கு, சரசாலை. (40881)

L.M.L. *பஜாஜ் உதிரிகள்*

பழைய, புதிய வெஸ்பா பஜாஜ் உதிரிகளைப் பெற்றுக்கொள்ளவும், அவற்றைத் திருத்திக்கொள்ளவும் ஷண் மோட்டோஸ், ஹப்பி துணியகம் அருகாமையில், யாழ். வீதி, கிளிநொச்சி, (மானிப்பாய் வீதி - பாபு) கிளை: கண்டி வீதி, மீசாலை. (சி-4067

*தவறிவிட்டது*

புங்குடுதீவு முதலாம் வட்டாரம், திருச்செல்வம் கேதாரகௌரி என்பவரது 575173284V இலக்க அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் சாவகச்சேரி கண்டி வீதி, சூரிய பவானில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (40875)

*சோதிடம்*

வெளிநாடு ஜெனன ஜாதகக் குறிப்பு எழுத பலன் பார்க்க சோதிடர் சிவா, நல்லூர். தொடர்பு: சிவகுருசாமி ஆச்சாரி, மீனாட்சி அம்பாள் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (40847)

## மந்திகை டாக்டர்கள் சேவை நீடிப்பு

வடமராட்சி மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை, குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் வி. இராஜலிங்கம் ஆகியோருக்கு மேலும் ஒரு வருட காலத்துக்கு வடக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு சேவை நீடிப்பு வழங்கியுள்ளது.

அதன்பிரகாரம்இவ்வருடம் முழுவதும் இவர்கள் இருவரும் இங்கு கடமையாற்றுவார்கள்.

ஏற்கனவே சேவையிலிருந்து இளைப்பாறிய இவர்கள் சில வருடங்களுக்கு முன் மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

தற்போது மேலும் ஒரு வருட கால சேவை நீடிப்பு இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (இ 173)

## ஜெயப்பூர் நிறுவனம்

சாவகச்சேரி, மார்ச் 1

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தற்போது சாவகச்சேரி, கச்சாய் வீதியில், சத்தியம்மன் வித்தியாலயத்துக்கு அருகில் உள்ள இல்லம் ஒன்றில் இயங்கி வருகிறது.

செயற்கைக்கால் பொருத்துவது உட்பட வழமையான சேவைகளை பிரஸ்தாப நிறுவனம் ஆரம்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (-)

---

# பொருளியல்

## பிரத்தியேக வகுப்புக்கள்

ஆசிரியர் - திரு. கு. உதயன் (B B A.)

**A/L 96** பகுதி II (அரச நிதி)
பகுதி I (பணம், வங்கி)

**A/L 97** புதிய பிரிவு

இடம்: 35/1 திருவையாறு,
136, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.

ஆரம்பம்: **05—03—96** (40314)

---

# பொருளியற் கல்லூரி

பரந்தன் மக்கள் வங்கி முன்பாக
கரடிப் போக்குச் சந்தி

**வன்னிப் பெரு நிலப்பரப்பில்!**

யாழ்ப்பாண; பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

**G. A. Q; 1st IN COM**
**B. A; B. COM**

## பொருளியல்

**S.** வரதராஜன் B. A (Hons)

ஆரம்பம்:- **02 - 03 - 96**
சனி **10-00** A. M (சி-4075)

---

# ACADEMY OF ORIENTAL MARTIAL ARTS SHOTOKAN

(A. O. M. A.)

அக்கடமி ஒவ் ஒரியண்டல் மார்ஷல் ஆட்ஸ் சோட்டோகான் கராட்டி கழகத்தில் கராட்டியை ஆரம்பம் முதல் முறையாக பயின்று **10-09-95** அன்று திரு. றேமன் மாஸ்டர் அவர்களினால் கறுப்புப்பட்டிக்கான தேர்வு நடாத்தப்பட்டு —

(1) சி. மணிச்செல்வன் (4) உ. பாரதி
(2) க. தர்மேந்திரன் (5) இ. ஜெயராசசிங்கம்
(3) செ. ஜெகதீசன் (6) க. அருளழகன்

ஆகியோர் கறுப்புப்பட்டிக்கு தகைமையுடையவர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். இவர்களுக்கான கறுப்புப்பட்டி **27-02-96** அன்று 2ஆம் பண்ணை, கனகபுரம், கிளிநொச்சியில் வைத்து வழங்கப்பட்டது. (40468)

---

# பொருளியற் கல்லூரி

பரந்தன் மக்கள்வங்கி முன்பாக,
கரடிப்போக்குச் சந்தி.

**வன்னிப் பெரு நிலப்பரப்பில்!**

யாழ். முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவை!!

**கலை, வர்த்தகம் A/L 96,97**

| | |
|---|---|
| பொருளியல்:- | வரதராஜன் |
| கணக்கியல்:- | ஸ்ரீ |
| வர்த்தகம் :- | வரதன் |
| அளவையியல்:- | சர்மா |
| புள்ளிவிவரவியல்:- | தவசேகர் |
| தமிழ்:- | குழந்தை |
| இந்துநாகரிகம்:- | சோதி |
| புவியியல்:- | சண் |
| அரசியல்:- | கிருபாகரன் |

**A/L 96** பகுதி I மீட்டல்
பகுதி II பாடத்திட்டம்

வினா - விடை வகுப்பும் நடைபெறும்.

ஆரம்பம்:- **2 — 3 — 96** சனி **8-00** A. M.

குறிப்பு:-

1. போதிய இடவசதி இன்மை காரணமாக குறிப்பிட்டளவு மாணவர்களுக்கு மட்டும் முதலில் அனுமதி வழங்கப்படும். அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
2. நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-4076)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. ந. சுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாயார்

**நல்லையா இராசம்மா**

24-02-1996 இல் காலமானார்.
அவரின் பிரிவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அதிபர், பழைய மாணவர் சங்கம்
யா/ நல்லூர் மகாவித்தியாலயம்

(40890)

---

# குமரபுரம் சம்பவம் பேரதிர்ச்சி தருகிறது

## திருமலை ஆயர் தெரிவிப்பு

சமாதானத்துக்கான யுத்தமும், அரசியல் தீர்வுக்கான யோசனைகளும் பேசப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில், கிளிவெட்டிப் பகுதியில் உள்ள குமரபுரம் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலைகள் எம்மை பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கி இருக்கின்றன.

மட்டக்களப்பு — திருமலை ஆயர் வண. கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் பரவலாக இடம்பெற்று வரும் குண்டு வெடிப்புக்களும், கொலைகளும் கவலை தருவதோடு நிலைமைகள் சகல பக்கங்களிலும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன போல் தெரிகின்றது.

பகைமை உணர்வும், போர்க்குணமும் அதிகரித்துள்ளன. ஆயுத நம்பிக்கையை அகற்றி இரு தரப்பினரும் யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு வருவது அவசரமும், அவசியமும் ஆகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

---

## வெற்றிவேலு மாஸ்ரர்

நலன் பேணும்

# பழைய மாணவர் சங்க

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

அன்புடையீர்,

மேற்படி பொதுக்கூட்டம் தொடர்பாக 15-02-96 உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி பொதுக்கூட்டம் 17-06-96 அன்று நடைபெறும் என எம்மால் தவறாக அறிவிக்கப்பட்டுவிட்டது. 17-02-96 சிவராத்திரியன்று கூட்டம் நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருந்தது.

தற்போது மேற்படி கூட்டம் 04 - 03 - 1996 (பங்குனி மாத போயா தினம்) திங்கட்கிழமை பி. ப. 3.00 மணிக்கு வெற்றிவேலு மாஸ்ரர் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். தங்களது சிரமத்திற்கு மன்னித்து கூட்டத்துக்கு தவறாது சமுகம் தந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்

பூதவராயர் ஒழுங்கை,
பருத்தித்துறை. (40319)

---

# அறிவித்தல்

## இரட்சிப்பின் சத்தம் சபை

பிரதிஷ்டை ஆராதனை

கண்டி வீதி, சாவகச்சேரியில் அமைக்கப்பட்டிருக்கும் இரட்சிப்பின் சத்தம் சபை பிரதிஸ்டை ஆராதனை **02- 03- 1996** சனிக்கிழமை மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும். அனைத்து ஆவிக்குரிய சபைப் போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபைப்போதகர்
எஸ். எம். ஸ்ரீபன்

(40887)

---

அச்சுவேலி

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 07-03-96 ம் திகதி வியாழக்கிழமை காலை 11-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் தலைவர் மு.தருமராசா அவர்கள் தலைமையில் நடைபெறும். சகல பொதுச்சபை பிரதிநிதிகளையும் சமுகமளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கிறேன். தனிப்பட்ட அழைப்பிதழ் கிடைக்கப்பெறாத பொதுச்சபை பிரதிநிதிகளும் இவ் அறிவித்தலை ஏற்று சமுகமளிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மு. இரத்தினம்
செயலாளர்

(40953)

---

# கண்ணீர் அஞ்சலி

## DR. சிவலட்சுமி சிறியோகேஸ்வரன்

எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபரின் துணைவியார் லண்டனில் காலமான செய்தியை அறிந்து எமது இதயம் நிறைந்த கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகின்றோம். அவரது மறைவால் வேதனையுறும் கணவர், பிள்ளைகள், உற்றார், உறவினர் யாவர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்.
யா/நவாலி மகாவித்தியாலயம்
மானிப்பாய்.

(40850)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## விரட்டுவது நோக்கம்!

கொழும்பில் தமிழர்களைத் தமது வீடுகளில் வாடகைக்கு அமர்த்தியிருக்கும் சிங்களப் பொதுமக்களுக்கு, எச்சரிக்கைக் கடிதங்கள் கிடைக்கின்றன. அதனால் அவர்கள் வாடகை மூலம் தாம்பெறும் கொழுத்த வருமானத்தையும் பொருட்படுத்தாது, வாடகைக்குக் குடியிருக்கும் தமிழர்களை வீட்டைவிட்டுச் செல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க, வடக்கு-கிழக்கிலிருந்து செல்லும் தமிழர்கள் தங்கியிருக்கும் ஐநூறுக்கும் மேற்பட்ட ''லொட்ஜு''களும் மூடப்பட உள்ளன.

தமிழர்கள் கொழும்பில் வாழ்வதால் தான், முக்கிய அலுவல்களுக்காக தமிழர்கள் அங்கு சென்று தங்குவதால் தான், விடுதலைப் புலிகள் அங்கு ஊடுருவிக் குண்டுத் தாக்குதல்களை நடத்துகிறார்கள் என்று படையினர் கருதுகிறார்கள்!

இந்த வசதிகளை, வாய்ப்புகளை அடைத்துவிட்டால், தலைநகரைப் பாதுகாத்துவிடலாம் என்று நினைக்கிறார்கள். இது அவர்கள் போடும் தப்புக் கணக்கே.

விடுதலைப் புலிகள் நினைத்தால் வசதியீனங்கள், வாய்ப்புகளின்மைகளுக்கு மத்தியிலும் தாம் குறிவைக்கும் கருமங்களைச் செய்ய வல்லவர்கள். இது படை உயர் அதிகாரிகளுக்கும் தெரியும்.

எனினும், கொழும்பின் பாதுகாப்பை உறுதிசெய்வது என்ற போர்வையில், இதனை ஓர் அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தித் தமிழர்களைக் கொழும்பில் இருந்து வெளியேற்றிவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழர் தாயகப் பகுதியில் மக்கள் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியும், அப்பாவித் தமிழ் மக்களைப் படுகொலை செய்தும் அவர்களை இடம்பெயர வைத்து அவலமுறச் செய்வது போல —

கொழும்பு வாழ் தமிழர்களையும் இன்னற்படுத்தவே பாதுகாப்பு அதிகாரிகள் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் சுற்றிவளைப்பு, தேடுதல், கைது, தடுத்து வைப்பு என்று தென்னிலங்கை வாழ் தமிழர்கள் மீது ஆரம்பிக்கப்பட்ட கெடுபிடிகள், இப்போது அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விடுவதற்கான கடைசி எல்லையில் வந்து நிற்கிறது!

இது அவர்களின் தொழில் வாய்ப்பு, வருமானம், வசதிகள் என்பனவற்றைச் சீரழிக்கும் நோக்குடனும் வெகு சாதுரியமாக நடைமுறைப்படும் மறைமுகத் திட்டமாகும்.

சிங்களவர்கள் யாழ்ப்பாணம் செல்லமுடியவில்லை; அங்கு பாதுகாப்பாக, வசதியாக வாழ முடியவில்லை; ஆனால் கொழும்பிலும் தெற்கின் ஏனைய பகுதிகளிலும் தமிழர்கள் மிகப் பாதுகாப்பாகவும், வசதியாகவும் வாழ்கிறார்கள்; என்று பொறாமைப்பட்ட சிங்களப் பேரினவாதிகள்—

கொழும்பின் பாதுகாப்பு என்ற போர்வையை விரித்து தமிழர்களைத் தெற்கிலிருந்து விரட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள் அவர்களின் முகவர்களாக இருந்து செயற்படுகிறார்கள்;

எல்லாம் நன்மைக்கே. தெற்கிலிருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்டால் அது தமிழர் தாயகத்தின் மலர்வை விரைவுபடுத்தும்; அதற்கான சத்துமிக்க உரமாக மாறும்!

# உடனடியாக யுத்த நிறுத்தம் செய்து பேச்சுக்கான பாதையை திறந்துவிடுக

## தேசிய கலை இலக்கியப் பேரவை ஜனாதிபதிக்கு மகஜர்

தாமதமின்றி யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வை முன்னெடுப்பதற்கான பாதையை மீண்டும் திறக்க வேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பிய மகஜரில், தேசிய கலை இலக்கியப் பேரவை மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது.

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

சூரியப் பிரகாசம் ராணுவ நடவடிக்கை மூலம் 5 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் தமது சொத்துக்கள், வீடுகளை இழந்து தென்மராட்சியிலும், வடமராட்சியிலும், வன்னிப் பகுதியிலும் தங்கி உள்ளனர்.

மற்றும் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. விவசாயிகள், தொழிலாளர்கள் வருமானம் இன்றி அரைகுறை நிவாரணத்துடன் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இடம்பெயர்ந்த மக்கள், ராணுவம் அங்கு நிலை கொண்டிருக்கும் வரை ஒரு போதும் மீளக்குடியேற மாட்டார்கள். அப்படிக் குடியேறினால் இயல்பு வாழ்க்கைக்குப் பதிலாக இரத்தம் தோய்ந்த வரலாற்றை மேலும் தொடர்வதாகவே அது அமையும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற தங்களது ஆரம்ப நிலைப்பாட்டிலிருந்து மாற்றமடைந்து இராணுவத் தீர்வு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதையே இதுவரை இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன. தொடர்ந்தும் இவ்வழியில் செல்வதன் மூலம் யுத்தமும் பேரழிவுகளும் தொடரவே செய்யும்.

இனப்பிரச்சினைக்கு நியாயமானதும் கௌரவமானதுமான ஓர் அரசியல் தீர்வு எட்டப்பட வேண்டும் என்று தாங்களே அடிக்கடி கூறிவந்துள்ளீர்கள். ஆனால் தங்களால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளில் இருந்து இன்று பின்வாங்கி பல விடயங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளீர்கள்.

இதனால் தமிழ் மக்களுக்குப் பாதகமான பல அம்சங்கள் தீர்வுத்திட்டத்தில் இடம்பெற்றுள்ளதுடன், படிப்படியாக மேலும் பல அம்சங்கள் புகுத்தப்பட இடமளித்துள்ளீர்கள். இது நியாயமான ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்குத் தடையாகவே அமையும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்

இடம்பெயர்ந்து அல்லலுறும் தமிழ் மக்கள், தங்களிடமிருந்து வெறும் சலுகைகளையும், நிவாரணங்களையும் எதிர்பார்க்கவில்லை. தமது மண்ணில் சுயகௌரவத்துடன் அச்சமின்றி சுதந்திரமாக வாழும் நிலையை ஏற்படுத்தவே விரும்புகின்றனர்.

இவைகளைத் தாங்கள் கருத்தில்கொண்டு,

★ தாமதமின்றி யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி, பேச்சுவார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வை முன்னெடுப்பதற்கான பாதையை மீண்டும் திறக்கவேண்டும்.

★ கடந்த அரசாங்கங்கள் செய்தது போல, பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவது என்ற நிலைப்பாட்டிலிருந்து அல்லாமல், ஒரு தேசிய இனத்துக்குரிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது என்ற நிலையிலிருந்து தீர்வுத்திட்டத்தில் உரிய மாற்றங்கள், திருத்தங்கள் செய்து ஒரு நியாயமான தீர்வு முன்வைக்கப்பட வேண்டும்.

★ நீங்கள் முன்பு ஏற்றுக்கொண்டது போன்றே, இன்றும் ''தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகளாக'' விளங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளிடம், அத்தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கான நியாயமான அரசியல் தீர்வை எட்ட முன்வரவேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### தமிழீழ வானொலி

1996-03-01

★ 5-00 — ஆரம்பம் சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சி கீதம்
★ 5-10 — உணர்வின் ராகங்கள்
★ 5-30 — நாடகம்
★ 6-00 — உணர்வின் ராகங்கள்
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — இவ்வாரம் இவர்
★ 6-30 — ஒலிபரப்பு நிறைவு

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1996-03-01 இரவு

★ 8-00 — ஆரம்பம்
★ 8-02 — கலை மஞ்சரி
★ 8-20 — அரசியல் அரங்கம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 அறிவிப்புகள் தொடர்ந்து 9 . 00 மணி வரை தாயகப்பாடல்கள்

1996-03-02 காலை

★ 7-00 — ஆரம்பம்
★ 7-02 — மாவீரர் வணக்கம் தொடர்ந்து 7-30 வரை எழுச்சி கீதங்கள்
★ 7-30 — செய்திகள்.
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45— அறிவிப்புகள் தொடர்ந்து 8 . 00 வரை தாயகப் பாடல்கள்.

# ஜனாதிபதி – கூட்டணி சந்திப்பு ஒத்திவைப்பு

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று மாலை நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை காலவரையறையின்றி ஒத்திவைக்கட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிர்க்க முடியாத காரணங்களால் இப்பேச்சுவார்த்தை மற்றொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகத்தில் இருந்து தகவல் தரப்பட்டது என கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், தமிழ் மக்கள் கைது செய்யப்படுதல், தீர்வுத்திட்ட திருத்தங்கள் ஆகியவை குறித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த கூட்டணித் தலைவர்கள் திட்டமிட்டிருந்தனர். (இ-3)

# பாதுகாப்பு நடைமுறை வவுனியாவில் தளர்வு

வடக்கில் இருந்து செல்லும் பயணிகளில் குறித்த ஒரு தொகுதியினரையே வவுனியாவுக்குள் அனுமதிக்கும்பாதுகாப்பு நடைமுறை தளர்த்தப்படவிருக்கிறது.

எனினும் வவுனியாவில் பாஸ் வழங்கும் நடைமுறைகளில் மாற்றம் எதுவும் இருக்காது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதே சமயம் கொழும்பு மற்றும் பகுதிகளில் இருந்து வடக்கே வரும் பயணிகள் ஒரே நாளில் தாண்டிக்குளம் ஊடாக வடக்கே வர அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ.3)

# பாதிக்கப்பட்ட பிரதேச ஊழியருக்கு நிவாரணம்

கொழும்பு, மார்ச் 1

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யுத்த நடவடிக்கையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கு விசேட படி ஒன்றை வழங்க அரசு முடிவுசெய்துள்ளது.

அலவன்ஸ்கள் உட்பட மாதாந்த சம்பளத்தில் 25சதவீதம் விசேட படியாக வழங்கப்படும்.

வடக்கில் புதிதாக படையினர் கைப்பற்றிய இடங்களில் இவர்கள் பணியாற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஊக்குவிப்புப் படியை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

வடபகுதியில் சகஜ நிலையை ஏற்படுத்தும் பணிக்கு சுமார் 10 ஆயிரம் அரசாங்க ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள் என்று பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கே சென்று பணியாற்றும் ஊழியர்களுக்கு அரசு ஊக்குவிப்புப் படியை வழங்கும்.

இந்த வருடத்துக்கான ஊக்குவிப்புப் படிக்கு அமைச்சரவை அடுத்தவாரம் அங்கீகாரம் வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிரந்தர சேவையில் இல்லாதவர்களுக்கு, அவர்கள் வேலைக்கு வரும் நாள்களுக்கு ஏற்ப ஊக்குவிப்புப் படி வழங்கப்படும்.

அனுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களையே பாதிக்கப்பட்ட பகுதிகளாக அரசாங்கம் கருதுகிறது. (இ.3)

# நிதித்துறை அறிவித்தல் வைப்பகத்திற்கு வருக

கீழ்க்குறிப்பிடுவோரை கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்திற்த நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு அடையாள ஆவணங்களுடன் வருகை தருமாறு நிதித்துறை கேட்டுள்ளது.

★ தனேஸ்வரி சண்முகராசா — பெரியநாவலடி, கொடிகாமம்.
★ திருமதி மகாலட்சுமி சிவசோதி அல்லது சுஜாதா சிவசோதி — மிருசுவில்
★ வினாசித்தம்பி சிவலோகநாதன் — உசன், மிருசுவில்.
★ புவனேஸ்வரி கந்தசாமி — படித்த மகளிர் திட்டம், மிருசுவில்.
★ சுந்தரம் முருகையா — பறளாய் றோட், சுழிபுரம்.
★ முருகேசு நவரெட்ணம் — மே/பா. எஸ். தர்மலிங்கம் (நகர சபை) சாவகச்சேரி.
★ பூலோகம் தனபாலசிங்கம் — நுணாவில்,
★ ஆ. சின்னயா கணேசவேல் — சாவகச்சேரி. (உப தபாலதிபர் — கந்தரோடை)
★ வேலு நல்லப்பா சோமசுந்தரம் இராசமணி — மே/பா. சோ. செல்வரெட்ணம், முதலாவது அரிசி ஆலை, சாவகச்சேரி வடக்கு.
★ எஸ். குமாரசாமி — மே/பா. ரி. பத்மநாதன், பாதுகாப்பு ஊழியர், இலங்கை வங்கி, சாவகச்சேரி.
★ அழகரத்தினம் புவனேஸ்வரி அல்லது அழகரத்தினம் விக்னேஸ்வரன் — மட்டுவில் அம்மன் கோவில் வீதி, சாவகச்சேரி வடக்கு.
★ இலட்சுமணர் வடிவேலு — தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலடி, சாவகச்சேரி.
★ மதினி ஜெயரம் — நுணாவில் கிழக்கு.
★ கதிரவேலு பரமேஸ்வரி — ஊர்எல்லைத் தெரு, மீசாலை வடக்கு, மீசாலை.
★ சண்முகம் பெரியதம்பி — மே/பா. சி. கந்தசாமி, வேம்பிராய் றோட், மீசாலை வடக்கு, மீசாலை.
★ ராஜமணி யோகேஸ்வரி — மீசாலை தெற்கு.
★ வி. செல்வநாயகம்—மே/பா ரத்தினம், மீசாலை கிழக்கு.
★ திருமதி தேவகி கனேந்திரன் — மே/பா. ப. குழந்தைவேல், சிவன்கோவில் வீதி, மட்டுவில்.
★ வேலுப்பிள்ளை கந்தசாமி — மே/பா. என். சுந்தரலிங்கம், மட்டுவில் தெற்கு.
★ கந்தையா பசுபதிப்பிள்ளை — வேதக்கண்ணி முருகன் கோவிலுக்கு தெற்கே, மட்டுவில் தெற்கு
★ குணம் சறோஜாதேவி — பே/பா. தம்பு என்னம்மா, மட்டுவில் தெற்கு.
★ ராஜரட்ணம் அழகம்மா — மே/பா. ஏ. ரி. செல்வரெட்ணம், கைதடி, நுணாவில்.
★ சரவணமுத்து கிருஷ்ணபிள்ளை — தோப்பு ஒழுங்கை, அம்மன் வீதி, மட்டுவில் வடக்கு.
★ சுபத்திரா கந்தையா — மெய்கண்டான் வீதி, சரசாலை தெற்கு.
★ திருமதி பராசத்தி மகேந்திரம் — மே/பா. ஏ. ஏக்ஸ். தம்பிராஜா, 555, சரசாலை தெற்கு.
★ க. கைலாசபதி — கிராமசேவகர் கந்தோர், சரசாலை வடக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண விசாரணை அதிகாரி மற்றும் கிராமசேவையாளராக சிங்களவர்

## வலிகாமத்தில் நியமனம்

சாவகச்சேரி, மார்ச். 1

யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி, கிராம சேவையாளர் பதவிகளுக்கு சிங்களவர்களை அரசு நியமித்துள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரியாக கே. ரணசிங்கா என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் காலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

கிராம சேவையாளராக திருமதி குமாரி காமி என்பவர் நியமனம் பெற்றுள்ளார். கண்டியைச் சேர்ந்த இவரின் கணவன் பலாலி இராணுவ முகாமில் பணியாற்றி வருகிறாராம். (இ-3)

# 9 அரசியல்வாதிகளுக்கு இந்தியாவில் பிடி ஆணை

புதுடில்லி, மார்ச். 1

ஹவால் ஊழல் வழக்குப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றம் 9 அரசியல்வாதிகளுக்கு பிணையில் வெளிவர இயலாத கைது வாரண்ட் உத்தரவை பிறப்பித்துள்ளது.

மாதவராய் சிந்தியா, மொகமட்கான், பல்ராம் ஜாக்கர், வித்தியாசரன் சுக்லா, அர்ஜுன்சிங், அத்வானி, எஸ்வன் கினா, கல்பனா திராய், தேவிலால் ஆகியோரே இந்த 9பேரும் ஆவர்.

சிறப்பு நீதிபதி குப்தா இந்த உத்தரவுகளை வெளியிட்டார். (இ-3)

# விஜே கொலை பின்னணி அரசியல் நோக்கம்

## ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 1

விஜயகுமாரதுங்காவின் படுகொலை சம்பந்தமாக விசாரணை செய்த விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விஜயகுமாரதுங்காவைப் படுகொலை செய்வதற்கு அரசியல் நோக்கம் இருந்தது என்ற முடிவுக்கு வந்துள்ளது.

காலஞ்சென்ற பிரபல முக்கியஸ்தர் ஒருவரும், முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் சதித்திட்டம் வகுத்து ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவரை படுகொலை செய்வதற்குப் பொறுப்பாக இருந்துள்ளார்கள் என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மூன்று அங்கத்தவர்கள் கொண்ட இந்தக்குழு அதன் அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் சமர்ப்பித்தது. (இ-7)

## கொமர்ஷல் வங்கியில் ஓய்வூதியம்

சாவகச்சேரி, மார்ச் 1

கொமர்ஷல் வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள், பருத்தித்துறையில் இயங்கும் வங்கி அலுவலகத்தில் இன்றும், நாளையும் காலை 9-00 முதல் 11-00 மணிவரை பணமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பெப்ரவரி மாத ஓய்வூதியம்

சாவகச்சேரி, மார்ச். 1

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் அடுத்து வரும் 'ஹபரண' கப்பலில் எடுத்து வரப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

ஓய்வூதியர்களுக்கு வழங்கப்படவேண்டிய நிலுவைத் தொகையை மார்ச் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (இ-3)

மாகாண...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றைச் சமர்ப்பித்தார்.

இப் பிரேரணையைச் சபையில் கொண்டுவர முடியாது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். ஆனால் சபை முதல்வர் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்தார்.

அதனை ஆட்சேபித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

எனினும் பிரேரணை விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இனப் பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வு எதுவும் ஐ.தே. கட்சியிடம் இல்லாததாலேயே அக்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்ததாக பிரேரணையைக் கொண்டு வந்த அமைச்சர் தெரிவித்தார். (அ)

தப்பி ஓடிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பவருக்கும் அவரது மனைவி புஸ்பலதாவிற்கும் சாந்தி எனப்படும் மற்றொரு பெண்ணுக்கும் நீதிவான் 6 மாதகால் கடூழியச் சிறைத் தண்டனையும் வழங்கினார். (இ-7-ரி)

ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படும்.

★மாவட்டத்தின் பொறுப்பு உத்தியோக நடைமுறை அமுலாக்கல் யாவும் அரச அதிபரின் கீழ் கொண்டு வரப்படும்.

★ அபிவிருத்தி திட்டங்கள் யாவும் அரச அதிபரின் கீழே இனி மேற்கொள்ளப்படும். பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சகல அதிகாரங்களும் அரச அதிபரின் கீழ் வரும்.

★ யாழ். மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் பிரதேச செயலகங்கள் இனி இயங்கா. உதவி அரச அதிபர் அலுவலகங்களே இயங்கும். (இ-3)

பிரதேச...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேச செயலகங்களில் பணியாற்றும் கணக்காளர்கள் வடமாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

அந்த அந்த மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு ஏற்ப அவர்கள் இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர் என்றும் —

பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மேற்கொள்ள ஒரு கணக்காளரும் —

ஓய்வூதியப்பணிகளை மேற்கொள்ள ஒரு கணக்காளரும் — செயலகத்தில் பணிபுரிவர் என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (இ-3)

# பிக்குகள் வேடம் தரித்த 20 பேருக்கு புலிகள் பயிற்சி

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

பௌத்த பிக்குமார் வேடம் தரித்த — சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் பேசக்கூடிய — 20 பேருக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பயிற்சி அளித்துள்ளது என்றும் —

பாரிய குற்றச் செயல்களில் இவர்களை ஈடுபடுத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருகின்றனர் என்றும் — பொலீஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு தெரிவித்துள்ளார்.

காவி உடையில் வந்து பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க முயலும் இவர்கள் குறித்து பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் —

பௌத்த குருமாரும் இந்த போலி வேடதாரிகளை இட்டு அவதானமாக இருக்கவேண்டும் எனவும் — பொலீஸ் மா அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-7)

# பொலீஸ் காவலரண் மீது மன்னாரில் தாக்குதல்

கொழும்பு, மார்ச். 1

மன்னாருக்கும், தலைமன்னாருக்கும் இடையில் அமைந்துள்ள பி.எம்.சி. பொலீஸ் காவலரண் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

இத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை. (இ-3-6-7)

# மட்டக்களப்பில் ஒரே இரவில் 4 மின்மாற்றிகள் தகர்ப்பு

கொழும்பு, மார்ச் 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரே இரவில் 4 மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டன.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம் பெற்றது.

களுதாடுவல, களுவாஞ்சிக்குடி, பாலமுனை ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகளே தகர்க்கப்பட்டுள்ளன. (இ-7)

# அதிகாரப்பரவல் திட்டத்தை எதிர்க்க புதிய முன்னணி

கொழும்பு, மார்ச் 1

அரசாங்கத்தின் அதிகாரப் பரவல் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் அமைப்பினரும், பிரமுகர்களும் சேர்ந்து ஐக்கிய முன்னணி ஒன்றை நிறுவியுள்ளார்கள்.

நெவில் வருவாஹெற்றி, பி.கே. திசாநாயக்கா, குணதாசா அமரசேகர ஆகியோர் அமைப்பாளர்களாக இருந்து புதிய முன்னணியின் அமைப்புக் கூட்டத்தை நடத்தினர்.

ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். எஸ். பி. எச். ஹெற்றியாரச்சி, காமினி பெரேரா ஆகிய இருவரும் அமைப்புக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தனர்.

கூட்டத்தில் புதிய அரசமைப்புச் சட்டத்தை இயற்றுவதற்கான அமைப்பின் சிபார்சுகளை வகுப்பதற்கான அடிப்படைக் கொள்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அரசின் அதிகாரப் பரவல் திட்டத்துக்கு ஒரேயணியில் நின்று எவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது சம்பந்தமான விடயங்களும் ஆராயப்பட்டன.

அரசமைப்புத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு முன்னர், பயங்கரவாதம் ஒடுக்கப்பட வேண்டும் என்று அமைப்பாளர்களில் ஒருவரான லகுவா ஹெற்றி தமது உரையின் பேது எடுத்துரைத்தார். (அ)

# பஸ் கட்டணங்கள் இன்று முதல் உயர்வு

கொழும்பு, மார்ச் 1

தென்மாகாணத்தில் — காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை — மாவட்டங்களில் — தனியார் பஸ் கட்டணம் இன்று தொடக்கம் ஐம்பது சத வீதத்தால் உயர்த்தப்படுகிறது.

தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய இந்தக் கட்டண உயர்வு நடைமுறைக்கு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மேல் மாகாண தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் இன்று முதல் நடைமுறைக்குக் கொண்டு வரவிருந்த கட்டண உயர்வு —

ஜனாதிபதி சந்திரிகா அளித்த சிலவாக்குறுதிகளைத் தொடர்ந்து பின்போடப்பட்டுள்ளது.

இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் நியாயமான கட்டண உயர்வைக் கொண்டு வரும்விதத்தில் பஸ் உரிமையாளர்களுக்குச் சில சலுகைகளை வழங்க இருப்பதாக ஜனாதிபதி உறுதி அளித்தார். (அ)

## இறுதித் திகதி நீடிப்பு

சாவகச்சேரி, மார்ச் 1

அரச, தனியார் ஆதனங்களில் வியாபார மற்றும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் இறுதித் திகதி 10 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பப் படிவங்களை பெறத் தவறியவர்கள் குடும்பப்பதிவு அட்டையுடன் சாவகச்சேரியில் இயங்கும் நிர்வாகசேவைப் பிரிவுடன் அலுவலக நேரங்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என தமிழீழ நிர்வாகசேவை கேட்டுள்ளது. (இ-7)

ஹெலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரை ஆதாரம் காட்டி 'லங்காதீப' மேற் கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது. (இ-6)

# மரண அறிவித்தல்கள்

## ஐயாத்துரை இராஜசிங்கம்

(மலாயன் பென்சனியர்)

கொக்குவில் பாதிரி கோயிலுக்கு முன்னால் வசித்தவராகிய ஐயாத்துரை இராஜசிங்கம் கைதடி முதியோர் இல்லத்தில் 25-02-96 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் தகனக்கிரியை 26 - 02 - 96 திங்கட்கிழமை மாலை நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
S. அரியரத்தினம்
(நண்பர்)

சிங்கர் ஸ்தாபனம்,
பருத்தித்துறை.

(40888)

## கந்தையா கதிரவேலு

தனங்கிளப்பைச் சேர்ந்த சோதிடரும், பூசகருமான கந்தையா கதிரவேலு அவர்கள் நேற்று 29-2-96 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சின்னப்பிள்ளையின் பெறாமகனும், அமிர்தநாயகி, அற்புதராணி, அருட்பரஞ்சோதி ஆகியோரின் தந்தையாரும், கனகசுந்தரம், சின்னத்தம்பி, குணரத்தினம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், பார்வதி (முழங்காவில்), சுந்தரம்பிள்ளை (ஓய்வு பெற்ற சாவகச்சேரி வைத்தியசாலை ஊழியர்), கந்தசாமி (யாழ். பல்கலைக்கழக ஊழியர்) ஆகியோரின் சகோதரரும், சரவணமுத்து, விஜயலட்சுமி, லட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (01. 03. 96) காலை 10.00 மணிக்கு அன்னாரது தனங்கிளப்பு இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்

(40891)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் அவர்களால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 01-03-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org